விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 034 வள்ளுவர் ஆண்டு 2055 தை 08 திங்கட்கிழமை (22.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அயோத்தி இராமர் கோவில் மஹா கும்பாபிஷேகம் இன்று



## ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவாரா? காலக்கெடு விதிக்கிறது பொதுஜன பெரமுன


(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்க போட்டியிடுவாரா? இல்லையா? என்பதனை எதிர் வரும் மார்ச் மாதத்துக்குள் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என பொது ஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு காலக்கெடு விதித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தொடர்ந்தும் கட்சி மட்டத்தில் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது. தற்போது அமெரிக்காவில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷ மெய்நிகர் வழியாக கட்சியின் முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இறுதியாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி 02

# தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன்



## 184 வாக்குகள் பெற்று வெற்றி

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்காக நேற்று நடந்த இரகசிய வாக்கெடுப்பில் 184 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வெற்றி பெற்றுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மயக்கமுற்ற குடும்பஸ்தர் உயிரிழப்பு

(காரைநகர்)

கதிரையில் அமர்ந்திருந்து உணவு அருந்திய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் காரை நகர் - விக்காவில் பகுதியைச் சேர்ந்த 16

## அதிகளவு ஹெரோயின்; இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவிலில் அளவுக்கு அதிகமாக ஹெரோயின் உட்கொண்டதால் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்நேற்று 16

## இவ்வாண்டு புதியதோர் அரசாங்கம் மலரும்



### அநுரகுமார நம்பிக்கை

(கண்டி)

தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்ற வேண்டும் என்ற மக்களினதும், தேசிய மக்கள் சக்தி கட்சியினதும் கொள்கை இன்று ஒரு மித்துள்ளமை 15

## நாட்டில் பொருளாதார பயங்கரவாத நிலை

### சஜித் காட்டம்



(களுத்துறை)

இராணுவ வீரர்கள் எமது நாட்டை பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றினார்கள். ஆனால் இன்று எமது நாடு பொருளாதார பயங்கரவாதத்தை எதிர் 15

## செந்தில் தொண்டமான் சிறீதரனுக்கு வாழ்த்து



(கொழும்பு)

தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

"உங்களுடைய 15

## மாவீரர் துயிலுமில்லத்தில் சிறீதரன் எம்.பி அகவணக்கம்



15

## தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு பலருக்கு நம்பிக்கையை தந்துள்ளது

### தலைமைப் பொறுப்போடு சிறீதரன் கருத்து

(திருகோணமலை)

இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய வரலாற்றிலே ஒரு ஜனநாயக ரீதியான உரையாடல் ஊடாகவும் ஜனநாயக ரீதியான செயல்முறையின் ஊடாகவும் வரலாற்றில் முக்கிய வரலாற்றை பதித்துள்ளோம். என்னுடன் போட்டியிட்ட எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோருடனும் இணைந்து கட்சியினுடைய செயற்பாட்டினை இன்னும் பல வழிகளில் எமது மக்களின் உரிமைக்காக - தேசிய இருப்புக்காக தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் தொடர்ந்து 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



## திருமதி கிருஷ்ணகுமாரி பாலச்சந்திரா (S.L.T.S - I)

(பகுதித் தலைவர் - ஆரம்பக் கல்வி
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி)

**சேவை விபரம்**

தி/சாம்பல்தீவு மகா வித்தியாலயம்
03.02.1992 - 11.10.1992
தி/அல்பந்தாஹ் முஸ்லிம் வித்தியாலயம்
12.10.1992 - 02.03.1997
தி/கோபாலபுரம் தமிழ் மகா வித்தியாலயம்
03.03.1997 - 15.01.2006
யா/கோண்டாவில் றோ.க.த.வித்தியாலயம்
16.01.2006 - 01.01.2014
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி
02.01.2014 - 21.01.2024

Best Wishes

அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது பாடசாலை சக ஆசிரியரின் ஓய்வுகாலம் சீரும் சிறப்பு மிக்கதாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

நலன்புரிக் கழகம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

(18719)

# லங்கா மஹறால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(18722)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**

# ஜனாதிபதித்...

வேட்பாளர் குறித்து ரணில் விக்கிரமசிங்கவின் இறுதியான அறிவிப்புக்கு மார்ச் மாதம் இறுதி வரை கால அவகாசம் வழங்குமாறு பஷில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கும் எதிர்பார்ப்புடன், உள்ள தம்மிக்க பெரேரா தற்காலிகமாக பின்வாங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மறுபுறம் இருவருமே தேர்தலில் களமிறங்காவிடின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளரை நிறுத்த உள்ளதாகவும், இதன்போது ஷசிந்திர ராஜபக்ஷவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கட்சியின் உள்ளக தகவல்கள் கூறுகின்றன.

எனினும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை உறுதி செய்யும் வகையில் அந்த கட்சியின் நிறைவேற்று குழுவில் தீர்மானம் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# பெயர் மாற்ற அறிவித்தல்

கல்லுண்டாய், நவாலி தெற்கு, நவாலி எனும் முகவரியினையுடைய சக்திவேல் ஜெரோமியா ஆகிய எனது பெயரினை சக்திவேல் ஜெரோமியன் எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோலிசக் குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
சக்திவேல் ஜெரோமியன்

(18718)

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் கட்டடங்கள் திணைக்கள யாழ்ப்பாண நிறைவேற்று பொறியியலாளர் பணிமனையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய **திரு.அ.ரமணிதரன்** அவர்களின் பாசமிகு தந்தை

## அமரர் மருதலிங்கம் அரிதாசன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் வடமாகாணம்**

(18715)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## தங்கம்மா ஆறுமுகம்


ஆண்டுகள் மூன்றானதம்மா – ஆனாலும்
ஆறவில்லை உம் இழப்பு – நீங்கள்
அருகில் இருந்தபோது
புரியவில்லை உம் அன்பு – எமை
விட்டுப் பிரிந்த போது புரிந்தது
தாயின் அன்புக்கு சமமாக – அன்பு
செலுத்தக்கூடிய ஜீவன் இவ் உலகில் இல்லை
நீங்கள் இவ் உலகை விட்டுப் பிரிந்தாலும்
நாம் இவ் உலகில் வாழும் வரை உம் நினைவுகளை
சுமந்திருப்போம் தாயே.

உம் பிரிவால் துயருறும் பிள்ளைகள்
ஆ.குணபாலசிங்கம், ஆ.தனபாலசிங்கம்,
திருமதி சு.விஜயகுமாரி,
ஆ.விஜயபாலசிங்கம், ஆ.ஜெயபாலசிங்கம்,
ஆ.இராஜபாலசிங்கம்

தோற்றம் 07.05.1940 மறைவு 25.01.2021

(18720)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 1952 . 11 . 07

மறைவு 2023 . 12 . 25

கடந்த 25.12.2023(திங்கட்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குலசாமி

## அமரர் வேலுப்பிள்ளை குமாரசாமி (சந்திரன்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று 22.01.2024 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று 24.01.2024 புதன்கிழமை காலை வீட்டுக்கிருத்திய கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவநகர்,
7 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

இங்ஙனம்:
குடும்பத்தினர்
[illegible]

(C-8180)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 - 08 - 1956

மறைவு 22 - 01 - 2023

## அமரர் சிவசோதி நல்லம்மா (குட்டி)

உருவமைத்து உயிர் தந்த உத்தம தெய்வமே
எம்மைவிட்டு உயிர் நீர்த்து போனதன் மாயம் – என்ன
காலனவன் இரக்கமின்றி கவர்ந்து சென்றானோ
கதிகலங்கி மதி மயங்கி வாடுகின்றோம்
ஆண்டுகள் தடம் புரண்டு ஓடினாலும்
அம்மாவின் அன்புகள் மறையாது – மீண்டும்
ஒருமுறை பிறக்க வேண்டும் தாயே உன் வயிற்றில் இருந்து
அன்புக்கு இலக்கணம் வகுத்த தாயே
அன்பாலே எம்மை அரவணைத்த தெய்வமே – உங்கள் ஆத்மா
அமைதியாக சாந்தியடைய வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சில்லியோடை,
[illegible] மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்

(C-8185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால்
# வேலையின்மை விகிதம் சடுதியாக அதிகரிப்பு

## நிதியமைச்சு அறிக்கை

(கொழும்பு)


**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டின் (2023) இரண்டாம் காலாண்டில் நாட்டில் வேலையின்மை விகிதம் 5.2 சதவீதமாக அதிகரித்துள்ளதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில், இலங்கையில் வேலையின்மை விகிதம் 4.7 சதவீதமாக இருந்த நிலையில், இரண்டாவது காலாண்டில் அது 5.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில், இளம் வயதினரின் (15-24 வயது) வேலையின்மை விகிதம் ஏனைய வயதினரையும் விட 25.8 சதவீதமாக அதிகரித்து ள்ளது.

மேலும், கடந்த 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலா ண்டில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 48.6 சதவீதமாகக் குறைந்து ள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் வேலையின்மை விகிதம் இன்னும் அதிகமாக இருக்கும் எனவும் எதிர்பார்க் கப்படுகின்றது. (நி)




## தாய்லாந்து பிரதமர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வின் சிறப்பு விருந்தினராக தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்து கொள்ளவுள்ளார். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், பெப்ரவரி 3ஆம் திகதி தாய்லாந்து பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார். (நி)

## இந்தியப் பெருங்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(டில்லி)

இந்திய பெருங்கடலின் தென் மேற்கு பகுதியில் நேற்று அதிகாலை 3.39 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளதாக இந்திய தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சுமார் 10 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்த மையம் தெரிவித்துள்ளது. (நி)

# ரணிலை சந்தித்தார் அமைச்சர் ஜெய்சங்கர்

(கம்பாலா)

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை சந்தித்து கலந்துரையாடி னார்.


இந்த சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவொன்றையும் இட்டிருந்தார்.

அந்தப் பதிவில் "கம்பாலா நகரில் நடந்த அணிசேரா நாடு களின் மாநாட்டில் பங்கேற்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கை க்கும் இடையிலான இருதரப்பு முயற்சிகளை முன் னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொடர்ச்சியான வழிகாட்டுதல் பாராட்டத்தக்கது என்று குறிப்பிட் டிருந்தார். (நி)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 23.12.2023 சனிக்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்
அமரர். **நாகலிங்கம் ஆனந்தராசா**
(ஓய்வுநிலை பிரதம லிகிதர் தேசிய வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 22.01.2024 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 23.01.2024 நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் கரணவாய் "மூத்தவிநாயகர் திருமண மண்டபத்தில்" நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொ.பே 077 667 3371

(18714)

தகவல்
குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 1938 . 01 . 12



மறைவு 2023 . 12 . 23

கடந்த 23.12.2023 (சனிக்கிழமை)
அன்று இறைபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு
அமரர். **செல்லத்துரை புஸ்பராணி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 22.01.2024 இன்று திங்கட்கிழமை
அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும்
வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

சேரி அடுகாமம்
கிளிநொச்சி.
077 174 6507

(18709)

தகவல்
தயாபரன் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு

# இணுவில் கந்தசுவாமி கோயில்

## தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா

## காலம் : 25.01.2024

## எதிர்வரும் வியாழக்கிழமை

காலை 6.00 மணிக்கு பால்குடப்
பவனி இணுவில் மருதனார்மடம்
பல்லப்ப வைரவர்
ஆலயத்திலிருந்து ஆரம்பம்

குறிப்பு : யாழ். குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்தும் பெரும் தொகையான பக்தர்கள் சென்றவருடம் போல் முருகனுக்கு பால்குடம் எடுப்பார்கள் என எதிர்பார்ப்பதனால் பால்குடத்திற்குரிய அனைத்துப் பொருட்களும் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முற்பதிவுகள் 24.01.2024 புதன்கிழமை வரை ஆலய கருமபீடத்தில் மாலை 4 தொடக்கம் 6 மணி வரை மேற்கொள்ளலாம்.

**பால் குடம் பற்றுச்சீட்டு 400/=**

## மாபெரும் பொங்கல்

காலை 9.00 – மாலை 3.00 மணிவரை பாரம்பரிய முறைப்படி புதிர் எடுத்து பொங்கல் ஆரம்பமாகும்

குறிப்பு : தொலைவிலிருந்து வரும் முருகன் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வெண்பொங்கல் பொதி 1200/=** **சர்க்கரை பொங்கல் பொதி 2000/=**

**காலை 9 - மாலை 3 மணிவரை 1008 சங்காபிஷேகம், சண்முகர்ச்சனை, விசேடபூசை அர்ச்சனைகள், இசை நிகழ்ச்சிகள், அன்னதானங்கள் வழிபாடுகள் நடைபெறும்.**

மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூசை, 6.30 மணிக்கு முருகப் பொருமானாலே விரும்பி அமைக்கப்பட்ட நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த உலகப்பெருமஞ்சத்தில் சண்முகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் வீதி வலம் வரும் நிகழ்வும் புகழ் பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்களின் இசையுடன் தமிழர்களின் பெருமை சொல்லும் பாரம்பரிய கலை நடன நிகழ்வுகளான கரகம், இனியம், பொம்மை, மான், மயில், குதிரை, தீப்பந்தம், சிலம்பாட்டம், பொய்க்கால் ஆட்டங்களும் பரதநாட்டியம், பறை, உடுக்கு, தப்பு, மிருதங்கம், இசை நிகழ்வுகளும் இடம்பெறும்.

முருகன் அடியவர்கள் அனைவரும் வந்து பால்குடம் எடுத்தும், பொங்கல் பொங்கியும் அர்ச்சனை வழிபாடுகளில் ஈடுபட்டும் உலகப் பொருமஞ்ச வடம் தொட்டு இழுத்தும் தைப்பூச நன்நாளில் தாங்கள் வேண்டும் வரம்கள் அனைத்தையும் முருகப் பெருமானிடம் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அனுசரணை

**விக்னா பாடசாலை பஸ் சேவை – நவாலி, மானிப்பாய், மருதனார்மடம் ஊடாக கே. கே. எஸ் வீதி, சுண்டிக்குளி வரை உள்ள பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பான பயணம். 077 728 6096**

**இணுவில் கந்தன் அடியவர்**

(C-8183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Solar System

# சோலர்
## பற்றிய போலி பிரச்சாரங்களில் ஏமாறாதீர்கள்

MICRO PC SYSTEMS

அதிகூடிய விலையில்
சோலர் சிஸ்டத்தை
வாங்கும் முன் சந்தை விலையை
தெரிந்து கொள்ளுங்கள்

**28 வருட கால அனுபவம் உள்ள நிறுவனம்.**

| 2 KW | 5 KW | 10 KW | 20 KW | 30 KW | 40 KW |
|---|---|---|---|---|---|
| Rs.540,000 | Rs.975,000 | Rs.1,750,000 | Rs.2,680,000 | Rs.4,015,000 | Rs.5,250,000 |
| 240 unit | 600 unit | 1200 unit | 2400 unit | 3600 unit | 4800 unit |

## 25 years warranty

Fronius
HUAWEI
solis
FOX ESS
SOLAX POWER
ENVERTECH A Green Future Is In Our Hands!
JinKO Solar
JA SOLAR
ZNSHINESOLAR
ulica solar LEADING IN TECHNOLOGY
risen solar technology
YINGLI SOLAR
DMEGC
MiPAQ
victron energy BLUE POWER
AQUASTRONG

**மேலதிக விலைக்கழிவுகளுக்கு அழையுங்கள்.**

Jaffna :0773963280/0777425973/0773963284/0711039536
Kilinochchi : 0706098482/0773963284
Vavuniya : 0773963278/0773963280/0777425973
Batticaloa : 0710356072/0710356069
Colombo: 0706645125/073013043/071963281/0773963283

Website:-http://www.micropcsystems.com/
Email id :- mail@micropcsystems.com
Hotline:- 0112367675

No.281, Hospital Road, Jaffna.
A9 Road, Kilinochchi.
No 27A, U.C Qurters, Kurumankadu, Vavuniya.
No.155-5C, New Kalmunai Road, Kallady, Batticaloa.
No.115, W.A.Silva M.W Colombo - 6.
No.11, Gemanu Mw, Borupane Road, Ratmalana.

(சி-8177)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை முதல் அளம்பில் வரை

# கரையோரப் பாதை அமைக்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் நலன் கருதி முல்லைத்தீவு சாலை தொடக்கம் அளம்பில் வரை கரையோரப் பாதை அமைக்கப்பட வேண்டும் என கடற்றொழிலாளர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.


பெருமளவு கடல் உணவுப் பொருட்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. கரையோர வீதி அமையுமானால் கடற்றொழிலாளர்கள் பெரும் நன்மையடைவார்கள்.

எனவே கரையோரப் பாதை அமைப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)



வடக்கில் மனிதாபிமான உதவிகளை செய்துவரும் "ஏர் நிலம்" அமைப்பின் ஊடாக "கல்வியே எங்கள் மூலதனம்" எனும் தொனிப்பொருளுடன் கற்றல் உபகரணங்களும் மதிய உணவு வழங்கும் நிகழ்வும் முல்லைத்தீவு மாவட்ட தென்னியங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்த வடக்கு ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்சந்தோஸ்ஜாவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது ஆளுநரால் இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி புரியும் என தெரிவித்த உயர்ஸ்தானிகர், விசேடமாக வடக்கு மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார். (நி-33)

# இறக்குமதி செய்யப்படும் முட்டை விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்திய முட்டையின் புதிய விலை 43 ரூபாவாகும் என வர்த்தக, வணிக, உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வற் அதிகரிக்கப்பட்டமையினால் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்திய முட்டைகள் 35 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.42 தொடக்கம் 11 மணிவரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெறும். (நி-29)

# முக்கொம்பன் வீதியினை புனரமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக முக்கொம்பன் கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு முக்கொம்பன் மாதர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 700 வரையான குடும்பங்கள் வாழும் முக்கொம்பன் கிராமத்தில் குறித்த வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக அக்கராயனில் இருந்து முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவை இரு ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளன.

ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், மாணவர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பல தடவைகள் வீதியினை புனரமைக்குமாறு மனுக்கள் கையளித்தும் பயன்கள் ஏற்படவில்லை. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் விரைவாக வீதி புனரமைக்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த கிராமங்களில் ஒன்றாக முக்கொம்பன் விளங்குகின்றது. ஏற்கனவே கிளிநொச்சி, பூநகரி அரசபுரம் ஊடாக முக்கொம்பன் வரை நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து பணி ஒரு வருடமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வீதியினை புனரமைத்து முக்கொம்பன் மக்கள் கந்தபுரம், அக்கராயன், கிளிநொச்சி பகுதிகளுக்கு வருகை தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி-350)

# இராசிபலன்

22.01.2024
தை 08, திங்கட்கிழமை
துவாதசி முன்னிரவு 9.46 மணிவரை
மிருகசீரிடம் முழுவதும்

சுபநேரம்-12.35-2.05 மணிவரை
இராகுகாலம்-8.05-9.35 மணிவரை
அமிர்த சித்தம்,

சந்திராஷ்டமம்
சுவாதி.

வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.


துலாம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள்.


மகரம்

செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிட்டும், மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


ரிஷபம்

எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.


சிம்மம்

செய்தொழிலில் ஆதாயம் கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய முயற்சிகள் கைகூடும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.


விருச்சிகம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.


மிதுனம்

மற்றவர்கள் உங்களிடம் ஏதாவது உதவி கேட்டு வரலாம், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம்.


கன்னி

பண வரவுகள் எளிதில் வசூலாகலாம், வியாபாரம் தொழில் சம்பந்தமாக முன்னேற்றமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.


மீனம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

நம் செயல்கள் சுவரில் எறிந்த பந்து போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் நாளை முதல் பொதுமக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு


(கொழும்பு)

இலங்கை மின்சார சபை, மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான முன்மொழிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ளது.

இந்நிலையில், குறித்த முன்மொழிவு தொடர்பாக கலந்தாலோசிக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த வாரம் ஒன்றுகூடவுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாளை செவ்வாய்க் கிழமை முதல் 21 நாட்களுக்கு மின்சார கட்டணத்தை திருத்துவது குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அந்த 21 நாட்களுக்கு மக்கள் தமது கருத்துக்களை எழுத்துபூர்வமாக சமர்ப்பிக்க முடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கை - உகண்டா ஜனாதிபதிகள் சந்திப்பு



(கம்பாலா)

உகண்டாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (நி)

# மேலும் 987 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட போதைப் பொருள் சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் 987 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 663 பேரும் குற்றப் புலனாய்வு பிரிவினால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 12 பேரும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான 14 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (நி)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 600 | 450 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 1000 | 900 | 1000 |
| தக்காளி | 600 | 500 | 550 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 140 | 150 |
| கோவா | 800 | 500 | 600 | 600 |
| கரட் | 800 | 1400 | 1000 | 1500 |
| பூசணி | 140 | 120 | 140 | 200 |
| புடோல் | 300 | 250 | 250 | 250 |
| வாழைக்காய் | 220 | 600 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பாகற்காய் | 850 | 600 | 600 | 1200 |
| வெண்டக்காய் | 600 | 500 | 300 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 800 | 800 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 800 |
| கறிமிளகாய் | 650 | 700 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 2500 | -- |
| போஞ்சி | 600 | 200 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 450 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 200 | 200 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 550 | 400 | 600 | 1000 |
| முள்ளங்கி | 200 | 250 | 250 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 160 |



உ
சிவமயம்
ஓம் ஸ்ரீராம ஜெயம்

## பாரத தேச அயோத்தியில் இராமர் ஆலயம் மலர்ந்தது 22.01.2024 சிவபூமியாகிய இலங்கையிலும் பஞ்ச ஈஸ்வரத் தலங்களும், இந்து ஆலயங்களும் தூய்மையும், அன்புடையவையாகவும் அழிவில்லாதவையாகவும் மலரும் 'ஓம் நமசிவாய' ஓம் ஸ்ரீராமஜெயம்'



**ரகுபதி ராகவ ராயா ராம்**
**பதீத பாவன சீதா ராம்**

மகாத்மா காந்தியின் கனவு இராம ஆட்சி உரு வாக வேண்டும். மகாத்மா காந்தியின் கனவையும், இந்திய இந்துக்களின் போராட்டங்களையும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இன்று 22.01.2024 ஐந்நூறு ஆண்டுகளின் பின்னர் (ப்ராணப்பிரதிஸ்ட்டை) கும்பாபிஷேகம் செய்கிறார். இன்றுதான் போராடிய இந்து மக்களின் ஆத்மா அமைதி சாந்தி அடையும் ஓம் ஸ்ரீராம ஜெயம்

நாமும் இராமர் படத்தை ஒவ்வொரு வீட்டிலும் வைத்து அகல் விளக்கு ஏற்றி ஓம் ஸ்ரீராம ஜெயம் ஓதி வழிபடுவோம்.

அருணகிரிநாதரும் **"எந்தை ரகுராம வருக"** என திருப்புகழில் பாடியுள்ளார்.

பிதாமகர் பீஸ்மர் அம்புப் படுக்கையில் இருக்கும்போது கிருஸ்ணனுக்கு 1008 சகஸ்ரநாமம் ஓதினார். இதைக் கலியுகத்தில் சுலபமாக "ராம" எனும் இரு எழுத்தில் ஓதினால் 1008 விஸ்ணுசகஸ்ரநாம மந்திரம் ஓதியபலன் கிடைக்கும்.

ஓம் ஸ்ரீராம ராமேதிராமே மனோரமே சகஸ்ரநாம தத்துல்யம் ராம நாம வராணனே.

"ஒரு கல், ஒருசொல், ஒரு இல்? ஒருவில்"

இராமரது அமைதி. வழிகாட்டியுள்ளது.

ஒருகல்: இராமபிரான் திருவடி பட்டதும் **ஒரு கல்** சபிக்கப்பட்ட அகலிகை சாப விமோசனம் பெற்றார்.

ஒரு சொல்: தந்தையின் **ஒரு சொல்** இராம பிரான் 14 ஆண்டுகள் வனவாசம் சென்றார்.

ஒருவில்:- தாரகை முதலான இராவணன் வரையும் அசுரர்களை **ஒருவில்** வீழ்த்தியது.

ஒரு இல்: சீதையை **ஒரு இல்** எனும் நெறிக்கு வேறு பெண்களையும் மனத்தாலும் தீண்டாமை.

தசரதச் சக்கரவர்த்தியின் இராமருடன் நான்கு சகோதரர்கள் பிள்ளைகளுடன் வேடர் குல குகனையும் சேர்த்து ஐவரானோம், வானரத் தலைவர் சுக்கிரிவனையும் சேர்த்து ஆறு பேரானோம், இராவணன் தம்பி விபீஷணனுடன் சேர்த்து ஏழு சகோதரரானோம்.

இதனை நுந்தை என இராமன் கூற்றாக மக்களால் பொழிந்தான் எனப் பாடினார் கம்பர்.

சபரி காட்டில் தவம் செய்து இராமர் வரவை பார்த்து நல்ல உலர்ந்த பழங்களைச் சேகரித்துக்காத்திருந்து நிவேதனம் செய்து நற்கதி அடைந்தால் சபரி.

பறவைகள் அரசன் ஜடாயுவுக்கு தந்தைக்குரிய பிதிர் மரியாதை செய்தார்.

"பரித்ராணாய சாதூனம்" மனிதத் தன்மையை நிலைக்கச் செய்ய, சாதுத் தன்மையை சற்குணத்தைப் போற்றி வளர்த்தல் வேண்டும் இதுவே எனது கட்டாயம்.

"ரமேதிராம்" நாம் இதய பீடத்தை அலங்கரிப்பவன் இராமனே. நாம் விலங்குத் தன்மையை அரக்கத்தன்மை நீக்கி, நம் இதயத்தில் இறைவனை மட்டும், இராம நாமம், சிவநாமம், முருகநாமம் **ஓதிப்பிரதிஸ்ட்டை** செய்யப்பட வேண்டும். திருமுறைகள் ஓத வேண்டும். முழுமையான உண்மையன்பு (அன்பே சிவம் அன்பே -ராம்) இதயத்தில் இருந்தால் நாம் இறைவனை உணரலாம்.

இறைவனின் நாமமே சத்யமாகும். இறைவனின் உருவமே தர்மமாகும்.

சீதா இராமபிரான் படம் வைத்து "ராம நாமம் சொல்வோம். இறை நாமமும் இறை வடிவமும் சேர்ந்து சத்ய தர்மங்களாகின்றன"

உங்களிடம் சத்யம் உள்ளது. தர்மம் உள்ளது. அத்துடன் துன்புறுத்தும் தன்மையும் கூட உள்ளது. துன்புறுத்தலை மட்டும் விட்டொழித்தால் நீங்கள் அஹிம்ஸ மூர்த்தியாகிவிடுவீர்கள்.

ஓம் ஸ்ரீராமம்.

இப்படியாக வேடன், வானரம், பறவை, மனிதன் எல்லோரும் ஆண்டவன் சந்நதியில் சமமே என்பதை நிலை நாட்டி உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டிய இராம பிரானை வழிபடுவோம், ஓம் ஸ்ரீராம ஜெயம் ஒதுவோம், ஸ்ரீஇராமச்சந்திரன் காட்டிய வழியில் இலங்கை மக்களாகிய நாமும் பாரத நாடும், உலக மகக்களாகிய எல்லோரும் வணாங்கி அறநெறி, அன்பு நெறி, தருமநெறியில் வாழ்வோம்.

இராமபிரான் தன்னைத் தஞ்சம் என அடைந்தவருக்கு சத்திய வாக்குடன் நடந்தவர் இராம பிரான் ஓம் ஸ்ரீராமஜெயம்.

இறைவன் எல்லோரிடமும் அறுவுணர்வு என்ற தன்மை உள்ளவர். அத்தகைய அறிவிலிருந்து வெளிவருவது தூய அன்பு. தூய அன்பின் வடிவமே இறைவன் ஓம் ஸ்ரீ ராம ஜெயம்.



க.கு.க சிவபாலன்
அடியார்களுக்கு
அமுதூட்டும்
அண்ணலார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாரதம்

# ராமர் கோயில் கும்பாபிஷே
# பாதுகாப்பு ஏற்பாடுகள்

**(டில்லி)**

**உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலின் கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமர்சையாக நடைபெறவுள்ள நிலையில் தீவிரவாதிகளின் சதித் திட்டங்களால் அயோத்தியில் 3 அடுக்கு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.**





உத்தர பிரதேசம் அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டப்பட்டு உள்ளது.

இந்த கோயிலின் திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, மடாதிபதிகள், அரசியல் தலைவர்கள், திரையுலகம், விளையாட்டுத் துறை பிரபலங்கள், வெளிநாட்டு

## ராமர் கோயில் திறப்பு விழாவை
## பக்தர்கள் காண பிரம்மாண்ட ஏற்பாடு
### 1100 சதுர அடியில் மிதக்கும் திரை

(டில்லி)

அயோத்தியில் உள்ள ராமர் கோவிலின் கும்பாபிஷேக விழா இன்று நடைபெறவுள்ளது.

பிரான் பிரதிஷ்டை என்று கூறப்படும் இந்நிகழ்ச்சியை நேரடியாக ஒளிபரப்ப அயோத்தியில் உள்ள சரயு காட்டில் இந்தியாவின் மிகப்பெரிய ஒளி-உமிழும் டையோட்கள் (எல்இடி) மிதக்கும் திரை நிறுவப் பட்டுள்ளது.

மிதக்கும் எல்இடி திரையின் முழு திரையின் நீளம் 69 அடி மற்றும் உயரம் 16 அடி ஆகும்.

பக்தர்கள், பிரதிஷ்டை விழாவை நேரடியாக ஒளிபரப்ப குஜராத் நிறுவனம் திரையை உருவாக்கியுள்ளது.

இந்த முழு திரையின் நீளம் 69 அடி மற்றும் உயரம் 16 அடி. இது முழு மிதக்கும் எல்இடி திரை தோராயமாக 1100 சதுர அடியாக உள்ளது. (ந)



## ராமர் கோ
### தீர்ப்பளித்த நீ

(டில்லி)


உத்தரபிரதேசம் அயோத்தியில் ராமர் கோவிலை இன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைக்கிறார்.

கோவில் திறப்பு விழாவில் பங்கேற்க வருமாறு முக்கிய பிரமுகர்களுக்கு, திரைப்பிரபலங்கள், முக்கிய கிரிக்கெட் வீரர்கள் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2019 ஆம் ஆண்டில் அயோத்தி ராம ஜென்ம பூமி- பாபர் மசூதி வழக்கில் தீர்ப்பளித்த உச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கம் இன்று
# ...ள் தீவிரம்



தலைவர்கள் என 11,000 விவிஜபிக்கள் பங்கேற்க உள்ளனர்.

ராமர் கோயில் திறப்பு விழாவின்போது தாக்குதல் நடத்துவோம் என்று பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது உள்ளிட்ட தீவிர வாத அமைப்புகள் பகிரங்க மாக எச்சரிக்கை விடுத்து ள்ளன.

ராமர் கோயில் திறப்பு விழாவின் போது தற் கொலைப்படை தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிர வாத அமைப்புகள் சதித் திட் டம் தீட்டியிருப்பதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்து ள்ளது.

இதன்காரணமாக அயோ த்தி நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய ப்பட்டு உள்ளன. (நி)

## ...காவில் வழக்கில்
## ...நீதிபதிகளுக்கு அழைப்பு

...நீதிமன்ற நீதிபதிகளுக்கு ராமர் கோவில் திறப்பு விழாவில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டு ள்ளது.

உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், போப்டே . தற் போதைய தலைமை நீதிபதி சந்திரசூட், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அசோக் பூஷன் மற்றும் அப்துல் நசீர் ஆகியோருக்கு அழைப்பு விடு க்கப்பட்டுள்ளது. (நி)



# சினிமா பார்த்த சிறுவர்களுக்கு 12 வருட கடும் தண்டனை

## வடகொரியாவில் அதிர்ச்சி சம்பவம்

(பியாங்யாங்)

தென்கொரியா பாப் இசை சினிமாவை கண் டுகளித்த 16 வய தான இரண்டு சிறு வர்கள் தண்டிக்கப்பட்ட வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

வடகொரியா மக்கள் தென் கொரியா மக்களு டன் எந்த வகையில் தொடர்பு ஏற்படுத்தினா லும் சொந்த நாட்டு மக்களுக்கே தண்டனை வழங்கும் கொடூரம் சமீப காலமாக நிலவி வரு கிறது.

அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உத்தரவில் தான் இது தொடர்வதாக கூறப்படுகிறது. வட கொரியாவில் தென் கொரியா நாடகங்களை பார்க்கவும் தடை விதிக்க ப்பட்டுள்ளது.

இந்த தடையை மீறி தென்கொரியா நாட்டின் பாப் இசை சினிமாவை பார்த்த 2 பள்ளி சிறுவர் களுக்கு 12 ஆண்டுகள் கடும் வேலை செய்யும் தண் டனையை வடகொ ரியா அரசு வழங்கியுள் ளது.

இது தொடர்பாக வட கொரியாவில் இருந்து வெளியேறி டோக்கியோ பல் கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையில் பேராசிரியராக இருக்கும் முனைவர் சோய் க்யோங் ஹூய் கூறுகையில், இதுபோ ன்ற கடுமையான தண்டனையை அளித்த தன் மூலம் ஒட்டுமொத்த வட கொரிய மக்க ளுக்கும் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் கொரிய கலா சாரம் வட கொரியாவில் ஊடுருவி வருவதை இது உறுதிப்படுத்துகிறது. அது கிம் ஜாங் உன் கட்ட மைத்துள்ள வட கொரிய சிந்தனையை எதிர்ப்ப தாக உள்ளது. அதனா லேயே அவர் இத்தகைய தண்டனை களை அமுல் படுத்துகிறார் என்று தெரி வித்துள்ளார். (நி)

## ஈராக்கில் உள்ள
# அமெரிக்க விமானப்படை தளம் மீது ஆயுதக் குழுக்கள் தாக்குதல்



(டெஹ்ரான்)

ஈராக்கின் மேற்கு பகு தியில் அமெரிக்க தள மொன்றை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட ஏவு கணை தாக்குதலில் பல அமெரிக்க படையினர் காய மடைந்துள்ளனர்.

ஆசாட் விமானப்படை தளம் மீது ஈரான் சார்பு குழுவினர் தாக்குதலை மேற் கொண்டனர் என அமெரி க்கா குற்றம்சாட்டியுள்ளது.

ஈராக் பாதுகாப்பு படையை சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார். ஈரா க்கில் உள்ள இஸ் லாமிக் ரெசிஸ்டன்ஸ் என்ற அமை ப்பே இந்த தாக் குதலை மேற்கொண்டுள்ளது. 2023 இல் உருவான இந்த குழு ஈராக்கில் உள்ள பல ஆயு தக் குழுக்களை உள் ளடக் கியதாக காணப்படு கின்றது.

இந்த குழுவினரே ஈரா க்கில் உள்ள அமெரிக்க தளங்கள் மீதான தாக்கு தல்களிற்கு உரிமை கோரி வருகின்றனர்.

அல்ஆசாட் தளம் தொட ர்ச்சியாக தாக்குதலிற்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

டமாஸ்கஸ் இல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பத்து பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் முழுமையாக சேதமுற்றது.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் மேற்கொள்ள ப்பட்ட மீட்பு பணிகளில் மேலும் சடலங்கள் மீட்கப் படலாம் என சிரியாவில் உள்ள மனித உரிமை ஆணையம் தெரிவித்து ள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொட்டிக்கிழங்கு




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical name - Aponogeton natah
family - Apog.Aponogetonaceae
sinh-Kekatiya.

இதுநீரில் வளரும் பூண்டு. இதில் கருங்கொட்டி, காறற்கொட்டி, கொட்டி என இம் மூன்று வகைகளுள் கொட்டி, காறற்கொட்டி இவ்விரண்டின் கிழங்குகளை ஏழை மக்கள் உணவாக அருந்துவார்கள் கருங்கொட்டி உணவிற்கு ஏற்றதன்று.

இதற்கு பேய்க்கொட்டி என வேறு பெயருமுண்டு இம் மூன்று வகை கொட்டிகளையும் பூவையும், இலையையும் கொண்டு



பகுத்தறிய லாம்.

இது ஓராண்டு செடியாகும் குழாயுருவான வேர்த்தொகுதியை கொண்டது. இலைகள் நீண்டவை. கூரான அமைப்பை கொண்டது.

இருபாலானா பூக்கள் மெல்லிய ஊதா நிறம். பழங்கள் பிளவுபட்டவை. 6-8 மி.மீ நீளமானது. மாசி- பங்குனி மாதங்களில் பூக்களை அவதானிக்கலாம்.

பரம்பலும் இனவிருத்தியும்- நீர் நிலைகளிலும் நீரோடைகளிலும் தானாக வளரும்.

### மருத்துவ பயன்கள்.

“கொட்டிக்கிழங்கு குளிர்ச்சியேன் பின்
தேமலுடன் ஒட்டிநின்ற மேகம் ஒழிக்கும் காண்- வட்டமுலை மானே!
அகக்கடுப்பும் வந்த வழலுந் தணிக்கும்
தானே யிதையறிந்து சாற்று”

கொட்டிக்கிழங்கின் வேரின் அடிப்பகுதி உருளைக்கிழங்கு போல் இருக்கும். கொட்டிக் கிழங்கு பூத்த பின்பு இவ்வேர் கிழங்குகளை சேகரித்து நன்கு கழுவி சிறு சிறு வில்லைகளாக வெட்டி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும்.

இச் சூரணத்தில் ஒரு தேக்கரண்டியளவு எடுத்து பசுப்பாலில் கலந்து காய்ச்சி அருந்தினால் உடற்சூடு தணிந்து. உடலிற்கு பலத்தை கொடுக்கும். பெண்களுக்கு வெள்ளைபடும் நோய் குணமாகும்.

உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதற்காக இக்கிழங்கை கறி சமைத்து உண்ணலாம். அல்லது வேர்க்கிழங்கை மாவாக்கி கஞ்சியாக காய்ச்சி உண்ணலாம்.

இக் கிழங்கை இடித்து. தூளாக்கி தேங்காய்ப் பாலில் கலந்து தேமல், படை ஆகியவற்றிற்கு பூசிவர விரைவில் ஆறும்.

இக் கிழங்குத் தூள் குழந்தைகளுக்கு ஏற்படும் கரப்பான் நோயை குணமாக்குவதிலும் மிகச்சிறந்தது. மேற் பூச்சாகவும் பூசலாம்.

கால் தேக்கரண்டியளவு உள்ளுக்கும் கொடுக்கலாம்.

கொட்டிக்கிழங்கை இடித்து சாறு பிழிந்து கொஞ்சம் சீனி அல்லது சர்க்கரை கலந்து கொடுக்க பித்த சம்பந்தமான நோய்கள் தீரும்.

கொட்டிக்கிழங்கு சாறு, கரிசாலைச் சாறு நெல்லிக்காய்ச் சாறு ஒவ்வொன்றும் நூறு மில்லியளவு எடுத்து பசுப்பால் 200 மில்லி, நல்லெண்ணெய் 600 மில்லி அளவு சேர்த்துக் காய்ச்சி பதத்தில் இறக்கி முழுகி வந்தால் சளி பித்த நோய்களும் நீங்கும்.

வீக்கத்துடன் கூடிய மூட்டு வாதத்திற்கு கொட்டிக்கிழங்கு இடித்து சாறு எடுத்து நல்லெண்ணெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி பூசலாம்.

அல்லது கொட்டிக் கிழங்கின் சாற்றை மஞ்சள் பொடியும் சேர்த்து சிறிது நல்லெண்ணெய் விட்டு தணலில் சூடு காட்டி தாங்கக் கூடிய சூட்டில் மூட்டுக்களுக்கு பற்றிட மூட்டுவலி வீக்கம் நன்கு தணியும்.

இக் கொட்டிக் கிழங்கை அவித்து உண்பதால் பெண்களுக்கு அழகு உண்டாகும் தோல் மென்மையாகவும் பிரகாசமாகவும் காணப்படும்.

# இன்று ஒரு தகவல் 13



தென்கச்சி கோசுவாமிநாதன்

## மனநோய்

கர்த்தர் நேற்று என்னைத் தேடி வந்தார். “சேர்! இந்த மனநோய் இருக்கே! அதைப்பற்றி நீங்க கொஞ்சம் விரமாகச் சொல்லணும்!“ என்றார். “அதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அது சம்பந்தமான டாக்டரிடம் கேட்கலாமே” என்றேன்.

“இல்லை சேர்! அனுபவப்பட்டவங்கதான் அதைப் பற்றி விபரமாகச் சொல்ல முடியும்”என்றார்! அவரை ஒரு மாதிரியா பார்த்தேன்! அவ்வளவுதான்!

பயந்து போய் ஓடியே போய்விட்டார்! இப்போ எங்கே இருந்து இதைப் படித்துக் கொண்டு இருக்கிறாரோ தெரியலே! அதனாலே இதைச் சொல்கிறேன்.

மனநோய்க்கும் மற்றநோய்க்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கு! இப்ப உடம்பிலே ஒரு நோய் வந்து விட்டால் உடனே அதைக் கண்டுபிடித்து மருந்து கொடுத்துவிடலாம். இந்த நோய்க்கு இந்த மருந்தைக் கொடுத்தா சரியாப் போய்விடும்! அப்படி என்று உறுதியாக சொல்ல முடியும். ஆனால் மனநோய்க்கு அப்படி சொல்ல முடியாது!

முதலிலே மனநோயைக் கண்டுபிடிப்பதே கஷ்டம். ஏன்னா மனநோய் உண்டாவதற்கு பல காரணம் இருக்கு. மூளைக்கு எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்குது என்று பார்க்கணும்!

பாதிக்கப்பட்ட மனிதனோட 'Personality Make up' அதாவது குணாதிசயங்களைப் பார்க்க வேண்டும்.

இதையெல்லாம் பொறுத்து மனநோய் வித்தியாசப்படுகிறது. ஒரு சில குடும்பங்களிலே மனநோய்க்கு ஆளானவர்கள் நிறைய பேர் இருக்கலாம்.

இது மாதிரி குடும்பங்களிலே உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட மனநோய் உண்டாகின்ற வாய்ப்பு அதிகம். பருவகால மாறுதல்களும் இந்த மனநோயை உண்டாக்கும்.

மனநோயை அதாவது குழந்தை பருவத்திலே இருந்து இளைஞரா மாறுகிற நேரம், இளைஞரா இருந்து பொறுப்புள்ள மனிதரா மாறுகிற நேரம், வயசான காலத்திலே யாரும் மதிக்காமல் விலகிப் போகிற சமயம். இதுமாதிரி சமயங்களிலே ஜாக்கிரதையா இருக்க வேண்டும். எதிர்பாராமல் ஏற்படுகிற அதிர்ச்சியாலேயும் சில பேருக்கு மனநோய் உண்டாகிவிடும்... எதிர்பாராத தோல்வி - வெற்றி, எதிர்பாராத இன்பம்-துன்பம், எதிர்பாராத வரவு-செலவு இதெல்லாம் குணாதிசயங்களை மாற்றி விடும். உதாரணத்துக்கு ஒன்று சொல்றேன்.

சிலருக்கு லாட்டரி சீட்டிலே பணம் விழுந்தாலும் மனநோய் வரும். பணம் விழவில்லை என்றாலும் மனநோய் வரும். போதைப்பழக்கத்தினாலேயும் இது வரும்! இதையெல்லாம் தவிர, நம்மாலே குறிப்பிட்டுச் சொல்லமுடியாத பல காரணங்களாலேயும் மனநோய் வரலாம். ஆகக்கூடி, இந்த மனநோய்க்கு இதுதான் காரணம்ன்னு கண்டுபிடிக்கிறது கஷ்டம். பொதுவா மனநோயைக் குணப்படுத்துறதுக்கு ரொம்ப காலம் ஆவதற்குக் காரணமே இதுதான்! காரணமே தெரியலைன்னா வைத்தியம் எப்படி பார்க்க முடியும்? அதிகபடியான “கூச்சல்” கூட உண்டாக்கிவிடும். இல்வாழ்க்கையிலே இருக்கிறவங்களிலே பல பேருக்கு மனநோய் வந்தா அதுக்கு இதுதான் காரணமா இருக்கும்.

மனநோயைப் பத்தி அதிகமா ஆராய்ச்சி பண்ணின ஒருத்தர் இருந்தார். அவரோட சொந்தக்காரருக்கு “லாட்டரி சீட்டிலே “ 0 லட்சம் விழுந்திட்டுது. சீட்டு வாங்கினவருக்கு பரிசு விழுந்த செய்தி தெரியாது.

அவரு ஏற்கனவே இதய பலவீனம் உள்ளவரு... ஆஸ்பத்திரியிலே இருக்கிறாரு.

அவருக்கிட்ட போய் திடீர்ன்னு உங்களுக்கு 10 லட்சம் பரிசு விழுந்திருக்குன்னு சொன்னா ஏதாவது ஆயிடும்ன்னு பயந்தாங்க அந்த மனநோய் ஆராய்ச்சியாளர்கள்.

“கவலைப்படாதீங்க... அவருக்கிட்ட பக்குவமா அதை சொல்லணும்... அதை எப்படி சொல்லணும் என்று எனக்குத்தான் தெரியும்... நீங்க யாரும் கிட்டே வராதீங்க... நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு படுக்கையிலே இருந்த அந்த ஆசாமிக்கிட்டே போனார்.

“இதோ பாருங்க... நான் ஒரு கதை சொல்கிறேன்..இப்ப உதாரணத்துக்கு லாட்டரி சீட்டிலே உங்களுக்கு ஒரு 10 லட்சம் பரிசு விழுந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள் அதை என்ன பண்ணுவீங்க!” அப்படின்னு கேட்டு இருக்கிறார் ஆராய்ச்சியாளர். உடனே படுக்கையிலே இருந்த அந்த ஆசாமி மெதுவா எழுந்து உடகாரந்து இதோ பாருங்கூ நீங்க சொல்லுறது உண்மையா இருந்தா அதிலே பாதிப்பணத்தை உங்க கிட்டேயே குடுத்துடுவேன்“ என்றார்! அவ்வளவுதான்.

ஆராய்ச்சியாளர் பொத்தென்று மயக்கம் அடைந்து கீழே விழுந்திட்டார். அப்புறம் என்ன அவருக்கு பக்கத்திலே ஒரு பெட் போட்டுட்டாங்க. அவருக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசிபலன்கள்

## தனுசு

தனுசு இராசி வாசகர்களே!

குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். உங்கள் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடப்பார்கள். சிலருக்கு பிள்ளைகள் வழியில் பொருள் வரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். அரசாங்க விவகாரங்கள் இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகள் நல்லபடி நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். ஆனால், மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அரசாங்க அதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சகோதரர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், அதிகாரிகளின் ஆதரவும் சக ஊழியர்களின் உதவியும் இருப்பதால், மிகவும் எளிதாகச் செய்து நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொழில், வியாபாரத்தில் கூடுதலாக உழைக்க வேண்டும். அதற்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பங்குதாரர்களால் வியாபாரத்துக்குத் தேவையான பண உதவி கிடைக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறிக்குப் பிறகு அனுகூலமாக முடியும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாகவே இருக்கும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சிரமம் எதுவும் இருக்காது. அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**சாதகமான நாட்கள்:** ஜன: 15,17,21,29,31 பெப்: 1,3,7,10

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 25 காலை முதல் 26, 27, 28 அதிகாலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 4,7

**வழிபடவேண்டிய தெய்வம்:** விநாயகர், பெருமாள்

**பரிகாரம்:** விநாயகர் அகவல் பாராயணம் செய்வதும் விநாயகருக்கு அறுகம்புல் மாலை அணிவித்து, தும்பைப் பூக்களால் அர்ச்சனை செய்வதும் நன்மைகளைத் தரும்.




## மகரம்

மகர இராசி வாசகர்களே!

அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். தெய்வ பக்தியும் ஆன்மிகத்தில் நாட்டமும் அதிகரிக்கும். புண்ணியத் தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பும் ஏற்படும். பெண்கள் மூலம் பொருள் சேர்க்கை உண்டாகும். உறவினர்களால் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கூடுமானவரை அளவோடு பேசவும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும் என்றாலும் பாதிப்பு இருக்காது. மாதப் பிற்பகுதியில் சகோதரர்களிடம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படக் கூடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும் என்பதால் சற்று எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும்.

அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். ஆனாலும் பணிச்சுமை அதிகரிக்கவே செய்யும். சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவிகரமாக இருப்பார்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாத முற்பகுதியில் விற்பனை அதிகரிப்பதுடன் லாபமும் படிப்படியாக உயரும். ஆனால், முன் பின் தெரியாதவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சற்று சிரமம் இருக்கவே செய்யும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வேலைச்சுமை கூடுதலாக இருக்கும்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 16,19,21,23,30 பெப்: 2,5,9,11

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 28 அதிகாலை முதல் ,29, 30

**அதிர்ஷ்ட எண்கள்:** 3, 7

**வழிபடவேண்டிய தெய்வம்:** தட்சிணாமூர்த்தி, ஆஞ்சநேயர்

**பரிகாரம்:** வியாழக்கிழமைகளில் நவக்கிரகங்களில் குருபகவானுக்கு மஞ்சள் மலர்களால் அர்ச்சனை செய்து வழிபடுவதும் சனிக்கிழமைகளில் அனுமனுக்கு அர்ச்சனை செய்து, அனுமன் சாலீசா படிப்பதும் நன்மை தரும்.




## கும்பம்

கும்ப இராசி வாசகர்களே!

உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றத்துக்கான வழிவகைகள் பிறக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேருவீர்கள். சிலருக்கு பிள்ளைகள் மூலம் புதிய ஆடை, ஆபரண சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புது வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். நவீன ரக மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படத்தக்க செய்திகளைக் கேட்பீர்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். ஆனால், குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மாதப் பிற்பகுதியில் உறவினர்களால் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். குடும்ப விடயங்களில் அவர்களின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். நண்பர்கள் மூலம் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் ஏற்படக் கூடும்.

அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு பதவி மாற்றமும் இட மாற்றமும் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் உயர் அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சக ஊழியர்களிடமும் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது.

தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்ததை விட குறைவாகவே கிடைக்கும். மறைமுக எதிரிகளால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். மாதப் பிற்பகுதியில் ஓரளவுக்கு நன்மைகளை எதிர்பார்க்கலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாகவே இருக்கும். உறவினர்களுடன் இணக்கமான சூழ்நிலையே காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் ஆலோசனைகளுக்கு மதிப்பு தருவார்கள். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.


**சாதகமான நாட்கள்:** ஜன: 15,18,21,24,26 பெப்: 4,6,9,12

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 31 முதல் பெப் 1, 2 அதிகாலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 2, 7

**வழிபடவேண்டிய தெய்வம்:** தட்சிணாமூர்த்தி, விநாயகர்

**பரிகாரம்:** விநாயகருக்கு வெள்ளிக்கிழமைகளில் தேங்காய் எண்ணெயில் தீபம் ஏற்றி, அறுகம்புல்லால் அர்ச்சனை செய்வது நல்லது. மேலும் வியாழக்கிழமைகளில் தட்சிணா மூர்த்திக்கு மஞ்சள் மலர் கொண்டு அர்ச்சித்து வழிபடுவதும் நன்மை தரும்.




## மீனம்

மீன இராசி வாசகர்களே!

மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பணவரவு கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும் அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை இல்லாமல் போகும். உங்கள் முயற்சிகளுக்கு மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பப் பெண்கள் பக்கபலமாக இருப்பார்கள். ஆனால், மாதப் பிற்பகுதியில் விலை உயர்ந்த நகை மற்றும் பொருட்களை இரவல் தரவும் வாங்கவும் வேண்டாம். வீட்டில் பொருட்கள் களவு போகக் கூடும் என்பதால், எச்சரிக்கையாக இருக்கவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

அலுவலகத்தில் ஓரளவுக்கு முன்னேற்றமான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் ஒத்துழைப்பு தருவார்கள். உங்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதில் இருந்த தடைகள் விலகும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த லைசென்ஸ் கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் இருந்தால், அதற்கான முயற்சிகளில் இந்த வாரம் ஈடுபடலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவரிடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும். உறவினர்களிடையே மதிப்பு மரியாதை அதிகரிக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 16,20,22,25,27,31 பெப்: 6,8,10

**சந்திராஷ்டம நாட்கள்:** 2 அதிகாலை முதல் 3, 4 காலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 1, 7

**வழிபடவேண்டிய தெய்வம்:** முருகப் பெருமான், பைரவர்

**பரிகாரம்:** அஷ்டமி தினத்தில் பைரவருக்கு அர்ச்சனை செய்து வழிபடுவதும், செவ்வாய்க் கிழமைகளில் முருகப் பெருமானுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவதும் நன்மை தரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் பாகம் - 2 384





முப்பத்திரெண்டாம் அத்தியாயம்

கிள்ளிவளவன் யானை

கூத்து முடிவதற்கும் சமையல் ஆவதற்கும் சரியாயிருந்தது. கட்டுக் கட்டாகத் தாமரை இலைகளைக் கொண்டு வந்து அவ்வீரர்களின் முன்னால் போட்டார்கள். பிறகு பொங்கலும் கறியமுதும் கொண்டு வந்து பரிமாறினார்கள்.

வீரர்கள் சாப்பிடத் தொடங்கிய பிறகு இளவரசர் அவர்களிடையே பந்தி விசாரணை செய்து கொண்டு வலம் வந்தார். அங்கங்கே நின்று அவ்வீரர்களின் உடல் நலத்தைப் பற்றி விசாரித்தார். அப்படி விசாரிக்கப்பட்டவர்கள் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள். பக்கத்திலிருந்தவர்கள் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைப் பாராட்டினார்கள்.

ஏற்கெனவே சோழ நாட்டு வீரர்களுக்கெல்லாம் இளங்கோவின் பேரில் மிக்க அபிமானம் இருந்தது. சமீபத்தில் அந்த அபிமானம் பன்மடங்கு பெருகியிருந்தது. தாய்நாட்டிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைத் தருவிப்பதற்கு இளவரசர் பெரும் பிரயத்தனம் செய்ததை அவர்கள் அறிந்திருந்தார்கள். அத்துடன் சாதாரணப் போர்வீரர்களுடனே இளவரசர் சமநிலையில் கலந்து பழகி க்ஷேமம் விசாரித்து, அவர்களுக்கு உற்சாகத்தை அளித்து வந்தார். இந்தக் குணாதிசயம் இளவரசரை அவ்வீரர்கள் தங்கள் கண்ணுக்குக் கண்ணாகக் கருதுமாறு செய்திருந்தது.

ஆகையால், வீரர்கள் அங்கங்கே இளவரசரை நிறுத்த முயன்றார்கள். துணிச்சலை வருவித்துக்கொண்டு அவரை ஏதேனும் கேள்வி கேட்பார்கள். முக்கியமாக, அவர்களில் பலரும் கேட்ட கேள்வி, "புலத்திய நகரத்தின் மீது படையெடுப்பு எப்போது?" என்பது தான். இந்தக் கேள்விக்கு விடையாக இளவரசர், "புலத்திய நகரத்தின் மீது படையெடுத்து என்ன பயன்? மகிந்தன் ரோஹணத்துக்கல்லவா போயிருக்கிறான்?" என்று சிலருக்குச் சொன்னார். "கொஞ்சம் பொறுத்திருங்கள் மழைக்காலம் போகட்டும்" என்று வேறு சிலரிடம் சொன்னார். யுத்தமின்றிச் சோம்பி இருப்பதில் சில வீரர்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டார்கள். வேறு சிலர், "தாங்கள் மாதமொரு முறையாவது இவ்விதம் வந்து எங்களைப் பார்த்துவிட்டுப் போனால் பொறுமையாயிருக்கிறோம்" என்றார்கள்.

பந்தி விசாரணை முடிந்ததும் இளவரசர் சற்று ஒதுக்குப்புறமாக அவருக்கென அமைந்திருந்த படைவீட்டுக்குச் சென்றார். வந்தியத்தேவனையும் ஆழ்வார்க்கடியானையும் அவர் தம்முடன் அழைத்துக் கொண்டு போனார். "இந்த வீரர்களின் உற்சாகத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? தஞ்சையிலிருந்து மட்டும் தகுந்த ஒத்துழைப்புக் கிடைத்திருந்தால், இதற்குள் இந்த இலங்கைத் தீவு முழுவதும் நம் வசமாயிருக்கும். அருமையான சந்தர்ப்பம் வீணாகிப் போய் விட்டது. இங்கே மழைக் காலத்தில் யுத்தம் நடத்த முடியாது. இன்னும் மூன்று நாலு மாதம் நம் வீரர்கள் சும்மா இருக்க வேண்டியதுதான்!" என்று சொன்னார்.

இதைக் கேட்ட திருமலை, "இளவரசே! தாங்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவது வியப்பாயிருக்கிறது. அங்கேயோ சோழ சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது! விஜயாலய சோழர் ஸ்தாபித்த ராஜ்யம். பராந்தகராலும் சுந்தர சோழராலும் பல்கிப் பெருகிய மகாராஜ்யம் உள் அபாயங்களினால் சின்னாபின்னமாகிவிடும் போலிருக்கிறது!" என்றான்.


"ஆம், ஆம்! நீங்கள் இருவரும் முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்னுடைய அற்பக் கவலையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். நல்லது. இப்போது நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் விபரமாகச் சொல்லுங்கள். முதலில் இவர் ஆரம்பிக்கட்டும்!" என்று இளவரசர் வந்தியத் தேவனைச் சுட்டிக்காட்டினார்.

வந்தியத்தேவன் உடனே தன் கதையைத் தொடங்கினான். காஞ்சியிலிருந்து தான் புறப்பட்டது முதல் கண்டவை, கேட்டவை எல்லாவற்றையும் கூறினான்.(தொடரும்..)



# சிறுவர் அரங்கம்

## மகிழ்ச்சியின் எல்லை



முல்லாவின் வீட்டிற்கு அருகில் ஒரு செல்வந்தன் வீடு இருந்தது. அவனிடம் ஏராளமான பணமும் வீடுவாசல், தோட்டம் துறவு என சொத்துக்களும் நிறைய இருந்தன. ஆனால் அந்த செல்வந்தன் ஒரு நாள் கூட மகிழ்ச்சியாக இருந்ததில்லை.

முல்லாவை சந்திக்கும் போதெல்லாம், "என்னால் ஒரு நிமிஷங் கூட மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் கவலையாகவும் கலக்கமாகவும் அல்லவா இருக்கிறது. நான் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியுடன் இருக்க முல்லா அவர்களே எனக்கு ஒரு யோசனை கூறக்கூடாதா?" என்று பரிதாபமாகக் கேட்டார்.

செல்வந்தன் ஒரு பெரிய பேழையில் தன்னுடைய பணத்தையெல்லாம் சிறுசிறு மூட்டைகளாகக் கட்டிப் போட்டு வைத்திருந்தான்.

சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவன் அந்தப் பணப் பைகளை ஒவ்வொன்றாக எடுத்து பார்த்துப் பார்த்து வைப்பான். முல்லா அவன் வீட்டுக்கு அடிக்கடி சென்று அவனுடன் பொழுதுபோக்காகப் பேசிக் கொண்டிருந்து விட்டு வருவது வழக்கம்.

அன்றும் அவர் வழக்கம் போல செல்வந்தன் வீட்டுக்கு வந்தார். அந்தச் சமயத்தில் செல்வந்தர் பணப் பெட்டியைத் திறந்து பணமூட்டைகளை எடுத்துப் பார்த்து[illegible] வைத்துக் கொண்டிருந்தார்.

"என்ன ஐயா செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டவாறு பணப் பெட்டி இருக்குமிடத்தை நோக்கி நடந்தார் முல்லா.

முல்லா வீட்டுக்குள் வருவதைக் கண்ட செல்வந்தன் அவசர அவசரமாகப் பணப் பைகளைப் பெட்டியில் வைத்துப் பூட்டத் தொடங்கினான்.

அப்போது அவனுடைய பண[illegible] செல்வந்தன் அறியாமலே பணப் பெட்டிக்கு அருகாமையில் விழுந்து விட்டது.

செல்வந்தன் அதைக் கவனிக்கவில்லை. ஆனால் முல்லா கவனித்தார்.

உடனே அவர் பாய்ந்து சென்று பணப் பையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்.

"ஐயோ என் பணப்பை போய் விட்டதே" என்று கூக்குரலிட்டவாறு முல்லாவைத் துரத்திக் கொண்டு செல்வந்தன் ஓடினான்.

முல்லா இரண்டொரு தெருக்கள் வழியாக வேண்டுமென்றே ஓடினார்.

செல்வந்தன் பணம் போய் விட்டதே என்று கூக்குரலிட்ட வண்ணம் முல்லாவைப் பின்தொடர்ந்து ஓடினான்.

முல்லா கடைசியாக செல்வந்தன் வீட்டுக்கே ஓடி வந்தார். பணப்பையை அவனுடைய பணப் பெட்டியின் மீது தொப்பெனப் போட்டார்.

செல்வந்தன் ஓடி வந்து பணப்பையைத் தூக்கிக் கொண்டு அப்பாடி இப்பொழுது தான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்ற மலர்ந்த முகத்துடன் கூறினான்.

பிறகு "முல்லா அவர்களே எதற்காக என் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினீர். இந்தப் பணம் கிடைக்காவிட்டால் என் உயிரே போயிருக்கும்" என்றார்.

"இப்பொழுது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா?" என்று முல்லா கேட்டார்.

"மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை முல்லா. பறிபோய் விட்டது என்று நான் நினைத்த பணம் திரும்பக் கிடைத்து விட்டதே! என் மகிழ்ச்சியை சொல்லவும் வேண்டுமா?" என்று கூறினான் செல்வந்தன்.

"எதற்காகப் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன் என்று கேட்டீரல்லவா? உமக்கு கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியை ஊட்டலாமே என்பதற்காகத்தான் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன். உம்மால் எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று கூறினீர் அல்லவா அதற்காகத்தான் உமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமே என்று பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்" என்றார் முல்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு என்பது வளரக்கூடியது.
ஞானம் நிலைத்துநின்றுவிடக்கூடியது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அயோத்தியில் குடமுழுக்கு சிவபூமியில் காணி அபகரிப்பு

இராமபிரானின் ஜென்ம பூமியாகிய அயோத்தியில் இன்று ஸ்ரீ இராமபிரானுக்குத் திருக்குடமுழுக்கு இடம்பெறுகிறது.

அயோத்தியில் இராமர் திருக்கோயிலின் சிறப்பைக் கூறுவதென்றால், பல மாதங்கள் கடக்கும்.

அந்தளவுக்கு அற்புதமும் அதிசயமும் ஆச்சரியமும் நிறைந்ததாக அயோத்தி இராமர் ஆலயம் விளங்குகிறது.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அயோத்தி இராமர் திருக்கோவிலின் கும்பாபிஷேகத்தையொட்டி, பன்னிரண்டு நாட்கள் உபவாசம் இருந்து இராமபிரான் தரிசித்த ஆலயங்களைத் தரிசித்து வந்தமை எப்போதும் இல்லாத சிறப்பு.

இஃது ஒருபுறமிருக்க, இராமபிரான் என்றதும் இலங்காபுரி எனும் சிவபூமியும் அதன் வேந்தனாக விளங்கிய சிவபக்தன் இராவணேஸ்வரனும் நினைவுக்குரியவராவர்.

ஆம், இராமபிரான் இராவணேஸ்வரனுடன் போர் தொடுத்து அவரை வதம் செய்தாராயினும் சிவபூமியாகிய இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அவர் இம்மியும் எண்ணினாரல்ல.

ஆம், இராவணேஸ்வரனை வதம் செய்த இராமபிரான் இலங்கை என்றும் சிவபூமியாக விளங்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக; இராவணனின் தம்பியாகிய விபூடணனிடம் ஆட்சியை ஒப்படைக்கின்றார்.

அதாவது இராவணன் தவறு செய்தானாயினும் அவன் தண்டிக்கப்பட்டுவிட்டான்.

ஆனாலும் சிவபக்தனாக இருந்து சிவபூமியாகிய இலங்கையை ஆட்சி செய்த – திருக்கோணஸ்வரம் எனும் திவ்ய சேத்திரத்தை நிர்மாணித்த இராவணேஸ்வரனின் வம்சம் வாழ்ந்தால் மட்டுமே, இலங்கை சிவபூமியாக விளங்கும் என்பதன் அடிப்படையிலேயே இராமபிரான் விபூடணனுக்கு முடிசூட்டி இச் சிவபூமியின் ஆட்சியை அவரிடம் ஒப்படைத்தார்.

இது ஒரு சிறு குறிப்பு மட்டுமே. இப்போது அயோத்தியில் இராமபிரானுக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.

இராமபிரானின் கோயில் இருந்த இடத்தை இஸ்லாமிய மன்னர்கள் இடித்து அழித்து மசூதி கட்டியிருந்தனராயினும் மீளவும் அதே இடத்தில் – இராமஜென்ம பூமியில் இராமபிரானுக்கு திருக்கோயில் அமைக்கப்பட்டு இன்று குடமுழுக்கு இடம்பெறுகிறது எனும் போதுதான் பாரதப் பிரதமர் ,நரேந்திர மோடியின் உன்னதம் தெரிகிறது.

ஆம், அங்கு இராமபிரானின் ஆலயம் இருந்த அதே இடத்தில் மீளவும் இராமருக்குக் கோயில் கட்டப்படுகிறது.

ஆனால் சிவபூமியாகிய இலங்கையில், சிவபக்தன் இராவணேஸ்வரன் ஆண்ட மண்ணில் சிவாலயங்களின் நிலங்களைக் கபளீகரம் செய்கின்ற அநியாயமும் சிவநிந்தையும் தாராளமாக நடக்கிறது எனும்போதுதான், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சிவபூமியாகிய இலங்கையில் சிவாலயங்களைக் காப்பாற்றவும் சிவவழிபாடு இடையறாது நடைபெறவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னெழும் கோரிக்கையை இன்றைய புனிதமான அயோத்தி ஆலய கும்பாபிஷேகத்தின்போது முன்வைப்பது பொருத்துடையது.

# ஐ.தே.கட்சி - பெரமுன கூட்டணி எமக்கு சவாலானதொன்று அல்ல

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்கெனவே கூட்டணி அமைத்துள்ளன. ஆனால் இவ்விரு கட்சிகளும் பலவீனமடைந்த நிலையிலேயே உள்ளன. எனவே இவை ஒருபோதும் எமக்கு சவாலான கட்சிகள் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களே இருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மக்களின் தவறான தீர்மானங்களால் தவறான தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு சென்றனர்.

எனவே, இனிவரும் காலங்களில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்தால், நாம் அவர்களுடன் இருப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன.

பொதுஜன பெரமுனவால் தெரிவு செய்யப் பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரே தற்போதைய ஜனாதிபதியாக உள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மிகவும் பலவீனமடைந்த நிலைமையிலேயே உள்ளது. எனவே இந்த கூட்டணி எமக்கு பாரிய சவாலாக அமையப் போவதில்லை.

மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப கட்சி முறையாகச் செயற்பட்டால் யார் யாருடன் கூட்டணி அமைத்தாலும் நாம் அச்சப்படத்தேவையில்லை.

எமது நாட்டுக்கென கலாசாரமும் ஒழுக்கமும் காணப்படுகிறது. அவற்றுக்கு ஏற்பவே செயற்பட வேண்டும்.

அத்துடன் யுக்திய என்ற பெயரில் பதில் பொலிஸ்மா அதிபரால் நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு செய்வதால் பாதாள உலகக் குழுவினரையும் கட்டுப்படுத்த முடியாது. போதைப் பொருளையும் அழிக்க முடியாது என்றார். (ந-7)

# தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை முன்னிலைப்படுத்த வேண்டும்

## சிறீதரனுக்கு சித்தார்த்தன் எம்.பி வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியத்தின் பலத்தை எதிர்காலத்திற்கு கொண்டு செல்ல தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் வழிவகுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.

கட்சிகளுக்குள் காணப்படுகின்ற பிரிவானது எதிர்காலத்தில் ஏனைய கட்சிகளுக்கிடையே ஒற்றுமையைக் கொண்டுவருவதில் சிக்கல் நிலையைத் தோற்றுவிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சி.சிறீதரனுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு மகிழ்வளித்தாலும், அதற்கு முன்பாக இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தமிழ்த் தலைமைகள் இடையே மனக் கசப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை முன்னிலைப் படுத்த புதிய தலைவர் அனைத்து கட்சிகளுடனும் இணக்கமாகச் செயற்பட வேண்டும் எனவும் சித்தார்த்தன்கூறியுள்ளார்.(ந-7)

# வித்தியா கொலை வழக்கு

# குற்றவாளிகளின் மேன்முறையீடு தொடர்பில் இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

புங் குடுதீவு பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மேன்முறையீடுகள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் கடந்த 9ஆம் திகதி அழைக்கப் பட்டது.

அதன்போது, இந்த வழக்கு தொடர்பான சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து, மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை இன்று எடுத்துக் கொள்வதற்கு நீதியரசர்கள் ஆயம் உத்தரவிட்டது.

2015ஆம் ஆண்டு புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற 18 வயது பாடசாலை மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்த வழக்கு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேருக்கு 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் மரண தண்டனை விதித்தது.

தமக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள விதம் சட்டத்துக்கு முரணானது எனக் குறித்த பிரதிவாதிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, குற்றச்சாட்டில் இருந்து தம்மை விடுவிக்குமாறுகோரி பிரதிவாதிகள் உயர் நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# கனமழை காரணமாக கால்வாய்களுக்கு சேதம்

நாட்டில் கடந்த காலங்களில் பெய்த பலத்த மழையால் பல கால்வாய்கள் சேதமடைந்துள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், பாதிக்கப்பட்டுள்ள கால்வாய்களை புனரமைப்ப தற்கான பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த புனரமைப்பு பணிகளுக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சேதமடைந்துள்ள சிறு கால்வாய்கள் அனைத்தும் இந்த வருடத்துக்குள் புனரமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தைய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

இவன் இரண்டாம்முறை திருமணம் செய்து கொண்ட கீரவெல்ல எனும் பெண்ணுக்கு அவளின் முதல் கணவன் மூலம் தேவராஜ எனும் மகன் இருந்தான். தனது இரண்டாவது மனைவியின் வேண்டுகோளின்படி தேவராஜாவுக்கு அரசுரிமையை வழங்கத் தம் தந்தை தயாராகுகிறார் என்பதை அறிந்த அரசகுமாரர் மூவரும் தந்தையை அரசமாளிகையில் வைத்தே கொலை செய்தனர். இச்சம்பவம் கி.பி 1521 இல் நடைபெற்றது.

அதன்பின்னர் கோட்டை இராச்சியம் றைகம, சீதாவக்கை, கோட்டை என மூன்றாகப் பிளவுபட்டது. கோட்டை புவனேகபாகுவிற்கும் சீதாவக்கை மாயாதுன்னைக்கும் றைகம மத்தும பண்டாரவிற்கும் (மத்தும பண்டார பின்னர் றைகம் பண்டார எனப் பட்டான்) உரியதாயின.

கோட்டை இராச்சியம் மூன்றாகப் பிளவுபட்டு சிறிது காலத்தில் ஏழாம் புவனேகபாகுவிற்கும் மாயாதுன்னைக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கோட்டை இராச்சியத்தின் எதிர்கால ஆட்சியுரிமை பற்றிய சிக்கலும் மாயாதுன்னை கோட்டை இராச்சியத்திற்குரிய சில பிரதேசங்களைக் கைப்பற்ற முயன்றமையும் இக்கருத்து வேறுபாடுகளுக்கான காரணங்களாகும். மன்னன் புவனேகபாகுவுக்கு சமுத்ரா தேவி என்ற மகள் இருந்தபோதிலும் கோட்டை இராச்சியத்தின் எதிர்கால அரச உரிமையை வழங்க மகன் ஒருவன் இருக்கவில்லை.

அக்காலத்தில் சிறந்த வீரனெனப் பிரபலம் அடைந்திருந்த விதிய பண்டாரன் சமுத்ராதேவியைத் திருமணம் செய்திருந்ததோடு, அவர்களுக்குத் தர்மபாலன், விஜய பாலன் என்ற புதல்வர்கள் இருவர் இருந்தனர். இவர்களில் தர்மபாலனுக்குக் கோட்டை இராச்சியத்தை ஒப்படைக்கப் புவனேகபாகு விரும்பினான். கோட்டை இராச்சியம் தொடர்பான எதிர்பார்ப்புடன் இருந்த மாயாதுன்னை இதனை விரும்பவில்லை. விஜயபாகு கொலையில் முக்கிய பங்கினை வகித்த மாயாதுன்னை சிறந்த வீரனாக இருந்ததுடன், கண்டி இராச்சிய மன்னனான ஜயவீர பண்டாரவின் உதவியையும் பெறக்கூடியவனாக இருந்தான்.

மாயாதுன்னையால் கோட்டை இராச்சியத்திற்கு இன்னல்கள் ஏற்படலாம் எனப் பயந்த புவனேகபாகு தனது பாதுகாப்பின் பொருட்டுப் போர்த்துக்கேயரை உதவிக்கு அழைத்தான்.

கோட்டை இராச்சியத்துக்கும் சீதாவக்கை இராச்சியத்துக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடு காரணமாக கோட்டை இராச்சியத்தின் பாதுகாவலராகத் தலைநகரினுள் நுழைந்த போர்த்துக்கேயர், அதன் சகல செயற்பாடுகளிலும் தலையிட்டுத் தமது அதிகாரத்தைப் பரப்ப முயன்றனர்.

போர்த்துக்கேயருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வர்த்தகப் போட்டி நிலவியதால் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயர் கோட்டைகளை அமைப்பதை முஸ்லிம்கள் விரும்பவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய போர்த்துக்கேயர், கோட்டை இராச்சியத்தில் இருந்த முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி புவனேகபாகு மன்னனைத் தூண்டினர்.

இதனால் கரையோரப் பகுதியில் இருந்த முஸ்லிம்களின் உதவி சீதாவக்கை மன்னனுக்குக் கிடைத்தது. இலங்கையில் இருந்த முஸ்லிம்களின் வேண்டுகோளின் பேரில் இந்தியாவில் கள்ளிக்கோட்டையின் அரசனாக இருந்த சமோரின் போர்த்துக்கேயரைத் தாக்குவதற்கு சீதாவக்கை மன்னனான மாயாதுன்னைக்குக் கடற்படை உதவி வழங்க முன்வந்தான்.

சமோரினினது உதவியுடன் மாயாதுன்னை போர்த்துக்கேயரைப் பலமுறை தாக்கியபோதிலும் போர்த்துக்கேயரிடமிருந்த கடற்படைப் பலத்தினதும் ஆயுதப் பலத்தினதும் முன்னால் இது வெற்றி பெறவில்லை.

புவனேகபாகு உயிரோடு இருந்த காலத்தில் சீதாவாக்கை இராசதானிக்கும் கோட்டை இராசதானிக்கும் இடையே சில மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதல்களின்போது போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் சார்பாகப் போரிட்டதுடன் போர்ச்செலவை மன்னன் கொடுக்க வேண்டியிருந்தது. புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியைப் பெற்றானேயன்றி அவர்களின் கீழ் இருக்கவில்லை. மன்னனைக் கத்தோலிக்க மதத்திற்கு மாற்ற போர்த்துக்கேயர் முயன்ற போதிலும் அவன் மதம் மாறவில்லை.

இதனால் காலஞ் செல்லச் செல்ல போர்த்துக்கேயருக்கும் புவனேகபாகுவுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படலாயின. சமயக் காரணங்கள் தவிர போர்த்துக்கேயர் தமது பொருட்களைக் கோட்டை இராச்சிய மக்களுக்கு அதிக விலைக்கு விற்றமையும் மக்களின் பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கியமையும் கருத்து வேறுபாடுகளுக்குக் காரணங்களாக அமைந்தன. இந்த முரண்பாடுகள் புவனேகபாகு மன்னன் சுடப்பட்டு மரணமடைந்ததில் முடிவடைந்தது. குதோ என்ற போர்த்துக்கேய எழுத்தாளனின் கருத்துப்படி 1550 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அரசன் கொல்லப்பட்டான்.

புவனேகபாகு மன்னன் உயிரோடு இருக்கும் போது தனது பேரனான தர்மபாலனின் உருவச்சிலையொன்றைப் போர்த்துக்கலுக்கு அனுப்பி, அதற்கு முடிசூட்டுவித்ததன் மூலம் தர்மபாலனுக்குப் போர்த்துக்கேயரின் பாதுகாப்புக் கிடைக்கும்படி செய்திருந்தான். இதனால் புவனேகபாகுவின் மரணத்தின் பின்னர் போர்த்துக்கேயரின் பாதுகாப்பின் மத்தியில் தர்மபாலன் கோட்டை இராச்சியத்தின் அரசனானான்.

தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக விளங்கியமை, கத்தோலிக்க சமயத்தைத் தழுவியமை, தமது அரசில் கத்தோலிக்க சமயம் பரவிட அனுமதித்தமை, கோட்டை இராச்சிய மக்களுக்குப் போர்த்துக்கேயரால் விளைந்த அநீதிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற காரணங்களால் தர்மபாலனுக்கு மக்களின் ஆதரவை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் புத்தபெருமானின் பற்சின்னத்தை பாதுகாப்பிற்காக சீதாவக்கைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை உருவானது. 1551 - 1597 வரை தர்மபால மன்னன் பெயரளவில் அரசனாக இருந்த போதிலும் கோட்டை இராச்சியத்தின் உண்மையான ஆட்சியாளர்களாகப் போர்த்துக்கேயரே இருந்தனர். தர்மபால மன்னன் தனக்குப் பின் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்கு சொந்தம் என மரண சாசனம் எழுதி வைத்ததால் அம் மன்னனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியம் சட்டரீதியான அதிகாரத்தின் மூலம் போர்த்துக்கேயருக்குச் சொந்தமானது.

தர்மபாலன் எழுதிய நன்கொடைச் சாதனத்தில் இன்னோர் அம்சமும் காணப்பட்டது. அதாவது கோட்டையை ஆண்ட அரசர்களே இலங்கை முழுவதுக்கும் அரசர் என்று உறுதிவாசகம் செய்யப்பட்டிருந்தது. ஆகவே இச்சாதனத்தின் பிரகாரம், போர்த்துக்கல் அரசன், கோட்டை அரசுக்கு உரிமைக்காரனாக வந்ததும் இலங்கை முழுவதுக்கும் அவன் அரசு உரிமை பாராட்ட இடம் அளிக்கப்பட்டது.

போர்த்துக்கேய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இலங்கையில் இருந்த பிரதம சேனாதிபதி (கப்ரின் ஜெனரல்) 1597 ஆம் ஆண்டில் தனது ஆணைக்குள் அடங்கிய பிரதானிகள் சமாஜம் ஒன்றை மல்வானை என்னும் இடத்தில் கூட்டினான். இதற்கு முன், போர்த்துக்கேய அரசனே இலங்கைக்கும் அரசன் என்ற பிரகடனம் கொழும்பு நகரத்தில் சகல மரியாதைகளுடனும் வைபவங்களுடனும் செய்யப்பட சிங்கள இராச குடும்பத்தினர் புதிய அரசனுக்கு விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தனர்.

அரச குடும்பத்தினர் மாத்திரம் இவ்வாறு விசுவாசப் பிரமாணம் செய்தாற் போதாது, சிங்களப் பிரதானிகளும் இப்பிரமாணத்தைச் செய்து போர்த்துக்கல் அரசனைத் தமது அரசனாக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காகவே மல்வானைச் சமாஜம் கூட்டப்பட்டது. இச்சமாஜத்துக்குச் சமுகம் அளிக்கும்படி ஒவ்வொரு கோரளையிலுமிருந்து இரண்டு பிரதானிகள் அழைக்கப்பட்டனர். சமாஜத்தில் தர்மபாலன் செய்த நன்கொடைச் சாதனம் வாசித்து விளக்கப்பட்டது.

அதன்பின் போர்த்துக்கல் காட்டுச் சட்டப்படி இக்காட்டைப் பரிபாலிக்க வேண்டுமா? அல்லது இத்தீவுச் சட்டத்தின்படியே பரிபாலிக்க வேண்டுமா என்று பிரதிநிதிகளாகவிருந்த பிரதானிகள் கேட்கப்பட்டனர். இக்காட்டுச் சட்டத்தின்படியே பரிபாலனம் நடைபெறவேண்டும் எனப் பிரதானிகள் விரும்பினர். பிரதம சேனாதிபதி அதற்கு இணங்கினன்.

ஆனால் பழைய சட்டங்களுக்கு விதிவிலக்காக, கிறிஸ்தவ சமயத்தைப் போதிக்கவும் பிரசாரம் செய்யவும் பரிபூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதைச் சேனாதிபதி எடுத்துக்காட்டினான். இவ்வாறு மல்வானைச் சமாஜத்தில் ஏற்பட்ட உடன்பாட்டையே மல்வான உடன்படிக்கை என்று சரித்திர ஆசிரியர் கூறுவர்.

போர்த்துக்கேய அரசர்கள் இப்படியாகக் கோட்டை மன்னரின் உரிமைக்காரராகி அவ்விராச்சியத்தைத் தமதாக்கினர். யாழ்ப்பாண இராச்சியம் ஏற்கெனவே பணிந்துவிட்டது.

எனவே, கண்டி இராச்சியம் ஒன்றுதான் போர்த்துக்கேயரை இலங்கையில் எதிர்த்து, இலங்கை முழுவதுக்கும் அவர்களை அதிகாரிகளாகாமல் தடுத்து வந்தது. கண்டியைத் தாக்கி அதனையும் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை போர்த்துக்கேயருக்கு வளரலாயிற்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தில்...

சேவைக் காலத்தில் தமிழ் மக்களுக் கான உரிமைகள் வென்றெடுக்கப் பட்டு தமிழ் மக்களின் பிரச்சினை களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண் டும் என்பதோடு, வடக்கு, கிழக்கு தமிழர்கள் மாத்திரமின்றி நாடு முழு வதும் உள்ள தமிழர்கள் மென்மேலும் வளர்ச்சியடைய தங்களின் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகி றேன்" என்று செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (ந-7)

## இவ்வாண்டு...

யால் இந்த ஆண்டில் புதிய அரசாங் கத்தை ஏற்படுத்த முடியும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

அனைத்து வகையிலும் மூழ்கிக் கொண்டிருக்கும் நாட்டைக் காப்பாற்ற புதிய மறுமலர்ச்சி யுகம் காலத்தின் கட்டாயத் தேவை என வலியுறுத்திய அவர், மேலும் கூறுகையில்,

தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்றுவது வெறும் அரசியல் வேலைத் திட்டம் அல்ல, அது தேசிய செயற் பாடு. புதிய மாற்றத்துக்காக மக்கள் தற்போது முன்வருகின்றனர்.

பொருளாதார ரீதியிலும் அனைத்து துறைகளிலும் நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் இன்று இருந்த இடத்தில் இருந்து ஒரு படி முன்னேறி நாட்டை கட்டியெழுப்பியுள்ளதாகக் கூறுவது நகைப்புக்குரிய விடயமாகும்.

ஆகவே, இந்தப் பேரினவாதக் கும் பலிடம் இருந்து நாட்டை விடுவித்து, நாட்டைப் புதிய பாதைக்கு வழிநடத்த வேண்டும். இதுவே தேசிய மக்கள் சக்தியின் இலக்காகும்.

எந்தத் தேர்தலை முதலில் நடத்தி னாலும் அதனை எதிர்கொள்ள தேசிய மக்கள் சக்தி கட்சி தயாராகவே உள்ளது.

நாட்டில் மரக்கறிகளின் விலை பாரி யளவில் அதிகரித்துள்ளது. தேவைக்கு ஏற்றவாறு விநியோகம் இல்லாதபோது விலை அதிகரிப்பது சந்தைக் கோட் பாடு. இந்த சூழலில் இதனை அர சாங்கம் தலையிட்டு முகாமைத்துவம் செய்ய வேண்டும் என்றார். (ந-7)

## மாவீரர்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத் தினார்.

தொடர்ந்து கிளிநொச்சி நகர மையத் திலுள்ள விநாயகர் ஆலயத்துக்கு சென்று வழிபாடு செய்தார்.

இதேவேளை இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் சிறீதரனுக்கு ஆலய முன்றலில் வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது. (ந-7)

## தமிழரசுக்...

கட்சித் தலைமைக்காக நடந்த தேர்தலையடுத்து இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் புதிய தலைவராக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்டிருந்தனர்.

தலைமைப் பதவிக்குப் போட்டி நிலவியதால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்வு நடத்த ஏற்கெனவே தீர் மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி புதிய தலைவரைத் தெரிவு செய்வதற் காகத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை நேற்று திருகோணமலை நகர சபை மண்டபத்தில் கூடியது.

இதன்போது நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின் முடிவுகளுக்கமைய சிறீதரன் எம்.பி. 184 வாக்குகளையும் சுமந்திரன் எம்.பி. 137 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். மற்றுமொரு வேட்பாளரான முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன், சிறீதரனுக்கு ஆதரவு வழங்கி போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்.

இதன் அடிப்படையில் 47 வாக்கு களை மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட சிறீதரன் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப் பட்டார்.

தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் தலைவர் ஒருவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

தலைவர் தெரிவு நடைபெற்ற பின் னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந் திரன், "தமிழரசுக் கட்சியின் தலை வருக் கான தேர் தலில் எமது கட்சி, ஒரு உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டுக்கும் சர்வ தேசத்துக்கும் முன்மாதிரியாக நிகழ்த்திக் காட்டி யிருக்கின்றது.

இந்தத் தேர் தலில் வெற்றி பெற்ற எனது நண் பன் சிறீதர னுக்கு என்னு டைய மன மார்ந்த வாழ்த்துக் களைத் தெரி வித்துக் கொள்ள விரும் புகின் றேன். நாங்கள் இருவரும் தொடர்ந்தும் ஒன் றாகவே பயணிப் போம். எங்களு டைய தலைவர் அண்ணன்மாவை சேனாதிராஜா இத்தனை கால மும் வழிநடத்திய தமிழரசுக் கட்சி யின் தலைமைப் பொறுப்பு இப் போது சிறீதர னிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இது மிகவும் சந்தோஷ மான விடயம். கட்சி யின் பய ணத்தில் நாங்கள் தொடர்ந் தும் ஒன்றாகவே பயணிப்போம்" என்றார். (ந-7)

## நாட்...

கொண்டுள்ளது.

நாட்டில் தற் போது பொருளா தார பயங்கரவாதமே நிலவி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் என்போர் மக் களின் உயிரைப் பறிப்பவர்கள் ஆவர். மத்திய வங்கி மீதான தாக்குதல் பயங் கரவாதத் தாக் குதல் போலவே நாட்டின் உழைக்கும் மக்களின் சேம லாப நிதியங்களில் ஏற்படுத்தும் பாதிப் பும் பயங்கரவாதமே என்றார். (ந-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 0192
R 2 0 5 0 7 3 R

தன நிதானய
திகதி - 2024.01.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1396
P 01 17 36 49 P
65334

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3608
சீட்டிழுப்பு திகதி 21.01.2024
O 15 16 23 39
O 72087

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 0675
தனுசு 05 34 52 53 தனுசு
24744 22

மஹஜன சம்பத
திகதி 2024/01/21
சீட்டிழுப்பு இலக்கம் 5366
Z 9 5 1 0 5 3

மெகா பவர்
திகதி 21/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1714
C 10 22 61 62 69
40580

சுப்பர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
21.01.2024 வெற்றி வாரம் 074
Q 6 4 0 2 8 3
86267
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,921,931.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2340 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.21 தினம் ஞாயிற்றுக்கிழமை
16 34 42 53 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,272,345.60
51449

சனிதா
திகதி 2024.01.21 வெற்றி வாரம் 4501 வர்ணம் இளஞ்சிவப்பு
24 28 31 49 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,781,676.80
59914
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 431
சீட்டிழுப்பு திகதி 2024.01.21
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 06 09 23
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,606,920

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4052 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.01.21 தினம் ஞாயிற்றுக்கிழமை
08 15 40 59 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,800,273.20
844694

ஜய சேர
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 40 05 20 51 53
சீட்டிழுப்பு வாரம் 1516 மஞ்சள் 21.01.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 495,650,416.20
தொலை பேசி 011-2 333 546-47

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2166
சீட்டிழுப்பு திகதி: 2024.01.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,318,932/-
11 41 49 74 T
908623

யாழ் மாவட்டத்திற்கான NLB யின் பொங்கல் பரிசு
இம்முறை எமது விற்பனையில்
25 லட்சம்
வெல்லப்பட்டுள்ளது
(6 இலக்கங்களும் பொருந்தியதில் 325804)
வெற்றியாளருக்கு எமது வாழ்த்துக்கள்.
சிறிய முதல் 40/= ரூபாவில் வெல்லப்பட்ட அதிர்ஷ்டம்.
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்.
ந.வசீகர்
"நடராஜா அதிர்ஷ்ட இல்லம்"
K.K.S. வீதி, சுன்னாகம்.
மஹஜன சம்பத 15-01-2024
E 3 2 5 8 0 4
25,00,000
NLB N 220063


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
STUDY IN UK & WORK VISA
ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி
(18672)


## தமிழரசுக்...

பொறுப்போடும் கடமையுடனும் செயற்படுவோம் என தமிழரசு கட்சியின் புதிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) திருகோணமலையில் இடம்பெற்றது. இதில் 47 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்ற சிவஞானம் சிறீதரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

என்னைத் தெரிவு செய்வதற்குக் காரணமாக இருந்த இயற்கை என்னும் இறைவனுக்கும் எனக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அயராது உழைத்த பொதுசபை உறுப்பினர்களுக்கும் முதலில் எனது நன்றிகள்.

இன்று இத் தெரிவு இது பலபேருக்கு பல நம்பிக்கைகளைத் தந்திருக்கின்றது. பல இளைஞர் யுவதிகள் கட்சி பற்றி அதிக அக்கறை கொள்ளவைத்துள்ளது என்னுடன் போட்டியிட்ட நண்பர் எம்.சுமந்திரன், சீ.யோகேஸ்வரனுடன் இணைந்து கட்சியினுடைய செயற்பாட்டினை இன்னும் பல வழிகளில் எமது மக்களின் உரிமைக்காக தேசிய இருப்புக்காக தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் தொடர்ந்து எங்களுடைய பொறுப்போடும் கடமையுடனும் செயற்படுவோம் அந்த கடமையை சரியாகச் செய்வோம் அதற்காக பலதடவை பல ஊடகங்கள் ஊடாக எங்களுடைய ஒற்றுமையையும் பலத்தையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

நண்பர் சுமந்திரன் கூட பலதடவை தெளிவாக பல இடங்களில் சொல்லியிருந்தார் எங்களுடைய பங்கு என்பது இனம் சார்ந்தது தமிழ்த் தேசியத்தினுடைய இருப்பு சார்ந்தது எங்களுடைய இனத்துக்கான அடிப்படை உரிமைகள் சார்ந்தது அந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் எல்லோரும் எங்களது கடமைகளை ஒன்றாக பலப்படுத்துவோம் என்று சிறீதரன் தெரிவித்தார்.(ந-7)


# நல் வாழ்த்துக்கள்



கௌரவ சிவஞானம் சிறீதரன்
(தமிழரசுக் கட்சியின் தலைவர்)

பாராளுமன்றில் நீதிக்காக குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ சிவஞானம் சிறீதரன் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர்களிற்கு எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

சி.ஜெகதீஸ்வரன்
மாதா கோவில் வீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
Congratulations!
(C-8196)


## அதிகளவு...

நடந்துள்ளது.

நுணாவிலை சேர்ந்த 29 வயதான பிரஸ்தாப இளைஞன் போதைக்கு அடிமையானவர் என்றும் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் பிணையில் விடுதலையான இளைஞன் நண்பர்களுடன் ஹெரோயின் போதைப்பொருள் உட்கொண்ட போது, அளவுக்கதிகமாக போதைப்பொருள் உட்கொண்டதால் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. (ந-7,30,33)

## மயக்கமுற்ற...

மயில்வாகனம் ஐங்கரன் (வயது 41) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்றைய தினம் வர்ணம் பூசும் வேலை செய்துவிட்டு மதிய உணவு அருந்திக்கொண்டு இருந்த வேளை விக்கல் ஏற்பட்டு, மயக்கம் அடைந்துள்ளார்.

உடனடியாக அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ந-7,60)

# கோரவிபத்தில் இருவர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடிப் பகுதியில் நேற்று விபத்துச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

வெற்றிலைக்கேணியில் இருந்து மருதங்கேணி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும், மருதங் கேணியில் இருந்து கட்டைக்காடு நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பட்டாரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளை எதிரில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இருவர் பலத்த காயங்களுடன் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருசில நாட்களுக்கு முன்பு இராணுவ உழவு இயந்திரத்துடன் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்த அதே இடத்தில் குறித்த விபத்தும் இடம்பெற்றுள்ளது

சம்பவ இடத்திற்கு வருகைதந்த மருதங்கேணி போக்கு வரத்து பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(ந-7,60)


## வேலைவாய்ப்பு

154 E நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் ராம் மெடிக்கல் நிறுவனத்திற்கு விநியோக உதவியாளர் (Delivery Boy) தேவை. விண்ணப்பிக்க விரும்பியவர்கள் மேற்காணும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.
(18700)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8184)

துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
அவுஸ்திரேலியா விசேட சலுகை
உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528
(18723)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சிவராசா

(ஓய்வுநிலை இலிகிதர் – கட்டைவேலி ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)



தோற்றம் 1955.04.10 மறைவு 2024.01.21

அந்தணத்திடல் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மேற்கு கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவராசா அவர்கள் நேற்று (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் இரஞ்சினி (ஓய்வுநிலை பிரதி அதிபர் யா/நெல்லியடி மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் துவாரகன் (warranty soft, software Engineer) அவர்களின் பாசமிகு தந்தையும், சகானா (ஆசிரியர் யா/வட. இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும் ஆரவ் ( மாணவன் யா/வட.இந்து ஆரம்ப பாடசாலை), அபினவ் (மாணவன் விபுலானந்தர் முன்பள்ளி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவலிங்கராஜா மற்றும் மனோகரன், புஸ்பராணி, மல்லிகாதேவி, புனிதவதி, சற்குணராசா காலஞ்சென்ற தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயா, இராசரத்தினம், செல்வரத்தினம், செல்வராசா, சாந்தி, அரியமலர், பாமினி, சாந்தினி, சிவனேந்திரன், தவேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.01.2024) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் பூவசரம்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 162 9972
077 949 0911

தகவல்:
குடும்பத்தினர்

(C-8182)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(18721)
076 825 7716 (ஆகாஸ்)

பழைய வீடு இடிபாடுகள் விற்பனைக்குண்டு
உடைத்து அப்புறப்படுத்த ஏறத்தாழ 1200 சதுர அடி கொண்ட பழைய வீடு விற்பனைக்கு உண்டு. யன்னல், கதவு, நிலை, ஓட்டுடன், மரம், கூரை இதனுள் அடங்கும் வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
"டேவிட் வாசா" சாரையடி, புலோலி தெற்கு, பிரதான வீதி பருத்தித்துறை.
(புகைப்பரிசோதனை செய்யும் இடத்திற்கு அருகில் உள்ள வீடு)
077 711 7712
077 399 4364
077 465 8638
(18712)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.